2022 அக்டோபர் 18]

8. ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களில் இந்தி மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்பன உள்ளிட்ட அலுவல் மொழி தொடர்பான பாராளுமன்ற குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தக் கூடாது என ஒன்றிய அரசினை வலியுறுத்தும் அரசினர் தனித் தீர்மானம்—பேரவைத் தலைவர் கருத்துரை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒன்றிய அரசால், தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியாவில் உள்ள இந்தி பேசாத அனைத்து மாநிலங்களிலும் இந்தி மொழியைத் திணிக்க இருப்பதைக் கண்டித்து, நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின்மீது அவை முன்னவர் உட்பட, பேசியிருக்கின்ற மாமன்ற உறுப்பினர்களோடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் என்ற முறையில் ஓரிரு வார்த்தைகளைக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்.*

இந்தி படித்தால் அல்லது இந்தியில்தான் மருத்துவம் படிக்க வேண்டுமென்று இப்போது அவர்கள் சொல்லியிருப்பது, நூறாண்டுகளுக்கு முன்னால் நடந்ததை நினைவுபடுத்துகிறது. சமஸ்கிருதம் படித்தவர்கள், தெரிந்தவர்கள் மட்டும்தான் மருத்துவம் படிக்க முடியும் என்ற நிலை இருந்தது. 1920-ல் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில், கேரளா, தமிழ்நாடு, தெலுங்கானா, ஆந்திரா, கர்நாடகா மற்றும் ஒடிசாவின் ஒரு பகுதியை உள்ளடக்கிய மதராஸ் பிரசிடென்சிக்கு முதன்முதலாக சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றபோது, 1920 டிசம்பரில் நீதிக் கட்சி அத்தேர்தலில் வெற்றி பெற்றது. அதற்குப்பின் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் காரணமாக, 1921 ஆம் ஆண்டு, நீதிக் கட்சிதான் தமிழ்நாட்டில் வட்டார மொழிகளிலும், ஆங்கிலத்திலும் கல்வி கட்டாயம் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று தீர்மானம் கொண்டுவந்தது; சட்டமாக்கியது. ஆனால், 1941 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சியில் அது உறுதிப்படுத்தப்பட்டு, மீண்டும் ஆங்கிலத்திலும், தமிழிலும் படிக்கின்ற வாய்ப்புக் கிடைத்தது. அதற்குப்பின் மொழிவாரி மாநிலத்தில் தமிழில் படித்தோம். முதல் மொழி தாய் மொழி என்றுதான் இருந்தது. மாண்புமிகு மறைந்த தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோதுதான் முதல் மொழி தமிழ் மொழி, இணைப்பு மொழி ஆங்கிலம் என்று கொண்டுவந்தார். அந்தப் பெருமை நம்முடைய மாண்புமிகு மறைந்த தலைவர் கலைஞர் அவர்களைத்தான் சாரும்.

[பேரவைத் தலைவர்] [2022 அக்டோபர் 18
பிற்பகல் 1–15

அவர் வழியில் இன்றும், 100 ஆண்டுகளுக்குப் பிறகும், தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள அனைத்து இந்தி பேசாத மாநிலங்களுக்கும் இப்படிப்பட்ட சோதனை ஏற்படுகின்றபோது, அதில் முதல் குரலாக தமிழ்நாட்டில் பெரியார், அண்ணா, கலைஞர் வழியில் வந்த நம்முடைய மாண்புமிகு இன்றைய முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தித் திணிப்புக்கு எதிரான இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதுமட்டுமல்ல; தமிழ்நாட்டில் மட்டுமல்ல; இந்தியாவில் உள்ள அனைத்து இந்தி பேசாத மாநிலங்களில் உள்ள இளைஞர்கள், இளம்பெண்கள் உலகம் முழுவதும் சென்று இப்போது படிப்பதற்கும், வேலை செய்வதற்கும் வாய்ப்புகளையெல்லாம் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்றால், அதற்கு முட்டுக்கட்டை போடுவதை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உணர்ந்துதான், வருங்கால சந்ததி, இளைஞர், இளம்பெண்களுக்காகத்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்களே தவிர, இது தமிழகம் மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள அனைத்து இந்தி பேசாத மாநில இளைஞர்களும் இதைப் பாராட்டுவார்கள், இதற்குத் துணை நிற்பார்கள், இதை எதிர்த்து நிற்பார்கள். இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பார்கள்.

ஆகவேதான், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் முனைவர் ஜவாஹிருல்லா அவர்கள், மேற்கு வங்கத்தில் உள்ள ஒருவரை குறிப்பிட்டுச் சொன்னதுமாதிரி, ‘தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அண்ணா, கலைஞர் போன்றோர் இல்லையென்று சொன்னால், எங்களுக்கு மொழிப் பற்று வந்திருக்காது, நாங்கள் ஆங்கிலப் புலமைப் பெற்று உலகம் முழுவதும் சென்றிருக்கமாட்டோம்’ என்று எனக்கு அவர்தான் சொன்னார் என்று அவரை குறிப்பிட்டு சொன்னார்கள். அந்த அடிப்படையில் இந்தியாவிற்கே ஓர் எடுத்துக்காட்டாக, உலகம் முழுவதும் சென்று, நம்முடைய இளைஞர்கள் படிக்கவும், வேலை செய்யவும் வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கின்ற இந்த அருமையான தீர்மானத்தை நானும் ஆதரிக்கின்றேன்.

தொடர்ந்து, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும்முகமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2022 அக்டோபர் 18] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் நாளை (19–10–2022) புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–17 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. (i) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம்–II, பிரிவு–2 இல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d–14)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 15-6-2021 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 96 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; மற்றும் (ii) அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு 1975 ஆம் ஆண்டு சுங்கவரிச் சட்டத்தின் (Customs Tariff Act) (மத்தியச் சட்டம் 51/1975) முதல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பொருட்களுக்கு விதிக்கத்தக்க பெருமளவிலான மாநில வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் 15-6-2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 97 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கபெற்றன.]

2. 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (ஆறாவது திருத்தம்) விதிகளை இயற்றியது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் 31-8-2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 109 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கபெற்றது.]